**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**MCOP No : 24/2023 தேதி: 27.06.2025**

**ம.சா. 2 – கோவிந்தராஜ்**

**<u>2 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எனக்கு சொந்த ஊர் குச்சம்பட்டி ஆகும். நான் தையல் வேலை செய்து வருகிறேன். மனுதாரர் இந்துராணி சொல்லி தான் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மனுதாகளுக்கு நான் உறவுமுறை இல்லை. பழக்கமானவர். விபத்து தேதியில் சுப்புலாபுரம் விளக்கில் டீக்கடையில் டீ குடித்து கொண்டிருந்தேன். தேனி – மதுரை ரோட்டில் விபத்து நடந்தது. விபத்தில் சம்மந்தப்பட்ட இரண்டு வாகனங்களின் பதிவு எண் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரரின் பேருந்து மேற்கிலிருந்து கிழக்குநோக்கி வந்தது. டாடா ஏசி வாகனம் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி வந்து வடபுறம் திரும்பியது. டாடா ஏசி வாகனத்தை ஓட்டி வந்த வாகன ஓட்டுநர் தான் அதிகவேகமாக ஓட்டி வந்து சமிக்கை போடாமல் விபத்தை ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் வாகனத்தில் பயணம் செய்த சங்கரநாராயணன் விபத்தில் இறந்துபோனார் என்றால் சரியல்ல. குற்றஅறிக்கையில் சாட்சியாக நான் இருக்கிறேனா என்றால் போலிசார்கள் விசாரித்தார்கள். விபத்து நடந்த இடத்தில் இல்லை என்றும் நான் விபத்தை பார்க்கவில்லை என்றும் மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.